ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2412/14 - 2024 නොවැම්බර් මස 26 වැනි අඟහරුවාදා - 2024.11.26

2412/14 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 104 / 44 ( VI)

**(87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டம்**

114 ஆம் பிரிவின் கீழான கட்டளை

''யோகாபுரம் ஜயரத்னம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்'' இன் நம்பிக்கைப் பொறுப்பாளர்களான :

1. வைத்தியர் விமல்ராஜ் ஜயரத்னம் ;
2. துரைராஜா ஜோசப் ஜேசுதானந்தர் ;
3. ஆறுமுகம் சுந்தரமூர்த்தி ;
4. நடேசபிள்ளை விஜேகுமார் ;
5. செல்வரத்தினம் அரவிந்தன் ; அத்துடன்
6. வெற்றிவேல் விஜேகுமார்.

ஆகியோர் (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின்கீழ் தமது கூட்டிணைப்புக்காக நீதி, பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சருக்கு விண்ணப்பித்துள்ளார்களாதலால் ;

மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நீதி, பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சர் ஹரினி அமரசூரிய ஆகிய நான், இக்கட்டளை மூலம், சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் கூட்டிணைப்புக்கு அதிகாரமளித்து -

(அ) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சுரவீர ஆரச்சிகே டெலாரி அமந்திகா சுரவீரவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் 28 ஆந் திகதியிடப்பட்ட 2460 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்புறுதியின் கீழ் முறையாக நியமிக்கப்பட்ட மேலே பெயரிடப்பட்ட சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப்பொறுப்பாளர்களும் அவர்களது அடுத்துறுநர்களும் ''யோகாபுரம் ஜயரத்னம் நம்பிக்கைப் பொறுப்பு" எனும் பெயர் மகுடத்தின்கீழ் பொது இலச்சினையையும் இடையறா வழியுரிமையையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் எனவும் ;

(ஆ) சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சொல்லப்பட்ட பெயர் மகுடத்தின் கீழ், சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பின் சார்பில் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்யலாம், பெறலாம், வைத்திருக்கலாம், கடனுக்கு எடுக்கலாம் அல்லது வேறு வகையில் கொள்ளலாம், விற்கலாம், கொடுத்துமாற்றலாம், ஈடுவைக்கலாம், அடமானம் வைக்கலாம், குத்தகைக்குக் கொடுக்கலாம் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கலாம் எனவும் ; அத்துடன்

(இ) சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சொல்லப்பட்ட பெயர் மகுடத்தின் கீழ் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புத் தொடர்பில், எழுகின்ற எல்லா வழக்குகளிலும் வழக்கு நடவடிக்கைகளிலும் இலங்கையிலுள்ள அல்லது வேறு எங்கேனுமுள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கும், வழக்குத் தொடுக்கப்படுவதற்கும், பதிலளிப்பதற்கும், பதிலளிக்கப்படுவதற்கும், எதிர்வாதம் செய்வதற்கும் மற்றும் எதிர்வாதம் செய்யப்படுவதற்கும் சட்டத்தில் இயன்றவர்களாகவும் தகுதிவாய்ந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும் எனவும் ;

பணித்து வெளிப்படுத்துகின்றேன்.

இக்கட்டளையானது இல்லாதொழிக்கப்படலாம் அல்லது அவசியமென எனக்குத் தோன்றுகின்றவாறான அத்தகைய முறையில் காலத்துக்குக்காலம் வேறுபடுத்தப்படலாம் அல்லது திருத்தப்படலாம்.

**ஹரினி அமரசூரிய**,
நீதி, பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும்
தொழில் அமைச்சர்.

கொழும்பு,
2024, நவெம்பர் 07.

EOG 11 - 0162

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.